## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச தொடர்புகளுக்கும், உபாய ஆய்வுகளுக்குமான நிறுவகத்தின் (''நிறுவகம்'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவகத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது பயிற்சிப் பிரிவின் மூலம் ரூபா 169,500 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக உபகரணங்களின் ஆண்டின் இறுதியின் போது தேறிய பெறுமதி ரூபா 152,550 ஆக இருக்க வேண்டிய போதும் அப்பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்யப்படும் என குறிப்பிடுகின்றோம். | சரியாக கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |

#### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா (மில்லியன்) | சமர்ப்பிக்கப்படாத காணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பெறுமானத் தேய்வு பெறுமதி | 1.7 | சொத்துக்கள் கொள்வனவு செய்த திகதி மற்றும் அவற்றின் கிரயத்துடன் பட்டோலை மற்றும் நிலையான சொத்துப் பதிவேடு | தற்போது நிலையான சொத்துப் பதிவேடு நாளாதுவரையாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெறுமானத் தேய்வு பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 32 ஆம் இலக்க உபாய வழி ஆய்வுகள் தொடர்பான இலங்கை நிறுவனம் (திருத்த) சட்டம் | | | |
| (i) 10(அ) ஆம் | நிறுவகத்தின் | சர்வதேச ஆலோசனை சட்டத்தின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு | முகாமைத்துவ சபையினால் ஐந்து நபர்களை உள்ளடக்கிய சர்வதேச ஆலோசனை சபையொன்று நியமிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான ஆலோசனை சபையொன்று நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சபையொன்றை நியமிப்பதற்கு பதிலாக மீளாய்வு சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவ சபை இந்த பெயரிட்ட உள்நாட்டு அங்கத்துவர்களுக்காக அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு அங்கத்தவர்களும் இந்த மீளாய்வு சபையில் உள்ளடக்க வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஏற்பாடுகளின் பிரகாரம் சர்வதேச ஆலோசனை சபையொன்றை நியமித்தல் வேண்டும். |
| (ii) | 10 உ (1) பிரிவு மற்றும் 10 உ (2) ஆம் பிரிவுகள் | சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற திகதி அதாவது 2006 செப்டம்பர் 29 ஆம் திகதி முதல் பண்டாரநாயக்க சர்வதேச உயர் ஸ்தானிகர் பயிற்சி நிறுவனம், இந்த நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டியிருந்ததுடன், அந்த நிறுவனத்தின் பிரிவொன்றாக பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஏனைய கற்கை பாடநெறிகளை நடாத்துதல் வேண்டும். மேலும் அவற்றில் சேவையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களும், நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களாக கவனத்தில் கொள்ளல் வேண்டும். எனினும், அந்த தேவை | 2020 ஆம் ஆண்டு வரை நிறுவனத்தால் பாடநெறிகள் நடாத்தி உழைக்கப்பட்ட பணத்தின் மூலம் அந்த சகல செலவினங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்தின் வாடகை செலுத்துவதற்காக நிதி ஏற்பாட்டை ஒதுக்குவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | | |
| (iii) | 10 உ (2)(i) ஆம் பிரிவு | சட்டம் அமுல்படுத்தப்படுகின்ற திகதிக்கு முன்னர் பண்டாரநாயக்க சர்வதேச உயர் ஸ்தானிகர் பயிற்சி நிறுவனத்தால் நடாத்திச் செல்லப்படுகின்ற ஏதாவது கணக்கு ஒன்றில் செலவு வைக்கப்பட்ட சகல பணமும் நிறுவகத்தின் நிதியத்திற்கு மாற்ற வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | பயிற்சி நிறுவனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற கணக்குகளில் உள்ள நிதி நிறுவனத்தின் முயற்சியில் உழைக்கப்பட்டமையா லும், அதன் செலவினங்களுக்காக அரசாங்கத்திலிருந்து நிதி ஏற்பாடு கிடைக்காமையினாலும் அந்தப் பணம் ஏனைய கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 395(ஏ) | வங்கி இணக்கக்கூற்று சேகரிக்கப்படுகின்ற பணம் வங்கியில் வைப்புச் செய்தல், காசோலை எழுதுதல் அல்லது காசேட்டைப் பேணிச் செல்லல் போன்ற ஏதாவது ஒன்றுடன் தொடர்பு படாத உத்தியோகத்தர் ஒருவராலேயே தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தில் இந்த சகல பணிகளும் ஒரே உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்டிருந் தது. | பதவியணியினர் பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் பதவிகளுக்காக ஆட்சேர்த்து பணிகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756 | பொருட் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படாத 149 பொருள் | தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய இந்தப் பொருட்கள் பொருட் பதிவேட்டில் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் சகல பொருட்களும் மெய்மையாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடயங்கள் மற்றும் நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | உள்ளடக்குதல் மற்றும் இந்த ஆண்டின் போது நூலகத்தின் புத்தகங்களை மெய்மையாய்வு செய்து அறிக்கை இடப்படும். | செய்யப்படல் வேண்டும். |
| (இ) | 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (01) ஆம் பந்தி | கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்குரிய சட்டத்தின் மூலம் நிறுவனத்தின் பதவியணியினருக்கு சம்பளம் மற்றும் படிகளை நிர்ணயிப்பதற்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட போதிலும் சம்பளம் மற்றும் ஊழியர் ஆளணி குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி விடயப் பொறுப்பு அமைச்சர் அல்லது பணிப்பாளர் சபையினால் அவ்வாறான நிதி ஏற்பாடு அங்கீரித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். எனினும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வெளிநாட்டு அமைச்சில் இருந்து நிறுவனத்திற்கு நியமிக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்களுக் காக கூட்டுமொத்தமாக ரூபா 857,903 தொகை மீளாய்வாண்டின் போது படியாக செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேவையான விபரங்கள் எதிர்வரும் வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய இலக்கம் | நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் | -மேற்படி- | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 02/2016 ஆம் இலக்க மற்றும் 2016 ஒப்டோபர் 21 ஆம் திகதிய இலக்கம் 02/2016(i) என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை. | மட்டத்திற்காக 04 சேவைத் தொகுதிகளின் கீழும், மத்திய முகாமைத்துவ மட்டத்திற்காக 03 ஊழியர் தொகுதியின் கீழும் அந்தந்த பதவிகளில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய சம்பளக் குறியீடுகள் 04 வரை காணப்பட்ட போதிலும் அதன் கீழ் இனங்காணப்படாத நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் (பயிற்சி) மற்றும் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி) இற்கு முறையே ரூபா 2,160,000 மற்றும் ரூபா 1,800,000 சம்பளமாக மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>(i) செயற்பாட்டு கைநூல் | | | |
| | * 3.2.1 ஆம் பிரிவு | நிறுவனத்திற்கு காணப்பட வேண்டிய பதவிகளின் எண்ணிக்கை, ஆட்சேர்த்தல் நடைமுறை, சம்பளக் கட்டமைப்பு மற்றும் படிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | | |
| * | 6.6 ஆம் பிரிவு | (i) கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் மூன்று மாதங்களும் 14 நாட்களும் தாமதமாகி 2023 யூன் 14 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் வரும் நிதிக்கூற்றுக்களுக்காக முகாமைத்துவ சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான கூட்டம் உரிய நேரத்தின் போது நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| | | (ii) ஏதாவது ஒரு வருடம் ஒன்றிற்கு உரிய ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து ஐந்து மாதங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் நிறுவனம் 2007 ஆம் ஆண்டு முதல் ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கவில்லை. | 2007 முதல் 2015 வரை நிதிக்கூற்றுக்கள் அடங்கிய அறிக்கை மற்றும் 2016 முதல் 2021 வரை ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ii) | நல்லாளுகை தொடர்பான வழிகாட்டியின் 2.3 ஆம் பிரிவு | வருடாந்த பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் | செயல்நடவடிக்கைத் திட்டம் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் |

| | | |
|---|---|---|
| | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குரிய தாக தயாரிக்கப்பட்ட உபாய வழித் திட்டம் வரிசை அமைச்சின் செயலாளரின் மூலம் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | திட்டம் தயாரித்து உரிய நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயல்பாட்டு விளைவுகள் ரூபா 2,900,074 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,075,825 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,975,899 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. பதவியணியினர் செலவினம் மற்றும் நுகர்வுப் பொருட்கள் வழங்கல் செலவினம் ரூபா 11,585,055 இனால் அதிகரித்திருந்த போதிலும் அதனுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 15,236,301 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2006 பெப்ரவரி 23 ஆம் திகதிய அமப003/214/0202/06 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் (அ) பிரிவின் பிரகாரம் கொழும்பு 07, ஹோட்டன் பிரதேசம், 24 ஆம் இலக்க இடத்தில் காணப்படுகின்ற ஆதனங்களின் உரிமைத் தன்மை நிறுவனத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | ஆதனங்களை கையேற்றல் தொடர்பாக முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் பிரதேச செயலாளருக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஆதனங்களின் உரிமைத் தன்மையை நிறுவனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம், நூலகர் மற்றும் தொலைத் தொடர்பு முகாமையாளர் என்ற பதவிகளுக்காக அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களை மீண்டும் சேவையில் அமர்த்தியிருந்த போதிலும், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தின் போது உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | முறையான அங்கீகாரத்துடன் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளுதல் வேண்டும். |